



ஓலை 66 | ஓசை 186 | மார்ச் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

## பொருள்

நட்புக்கு சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# பசித்தோர்க்கு உணவளி

பசியை போக்கிடு பகைவர் என்றாலும்
கசியும் நீரும் காலை உணவாகும்
விசித்திர உலகில் விண்நீர் பொய்த்தால்
புசித்திட உணவேது பூவுலக மாந்தர்க்கு

தானம் அளித்திடு தன்னால் இயன்றதை
ஞானம் கிட்டும் ஞாலத்தில் ஓர்நாள்
பானை உணவை பகிர்ந்து உண்டால்
ஏனைய உயிராய் எழிலாவாய் மறுநாள்

இல்லோர் என்றென இவ்வுலகம் சொல்லாது
எல்லோரும் ஒன்றென எல்லையின்றி வாழ்வோம்
பல்லாண்டு காலம் பசியோடு தேசங்கள்
நல்வாழ்வு வேண்டி நன்மக்கள் கூடுவோம்

வள்ளுவர் போற்றிய வையத்தின் வாழ்வியலை
வள்ளலார் வழிநின்று வயிற்றுக்கு உணவளிப்போம்
வள்ளலாரின் அருட்பெருஞ்ஜோதி வானுலகில் ஒளிக்கட்டும்
வள்ளல் குணமே வாழ்வியலில் செழிக்கட்டும்



கவிஞர் ஈ. தவணிதன், பல்லடம்

# வகுப்பெடுக்கும் இயற்கை

மலர் காய் கனிகளை இழந்து
இலைகளையெல்லாம் உதிர்த்து
பொலிவிழந்து நிற்கும்
வெள்ளத்தில் வாழுமோர் மரம்

பசுமை பெருகி
மலர்களோடு பூத்துக் குலுங்கும்
போதுமான நீரைத் தேடி
பூமியில் உயிர் வாழும்
அதே மரம்.



கவிஞர் ஸ்ரீனி. முத்துவேல், துபாய்

# உறவைத்தேடி!



வாழும் காலத்தில்
வாட்டமின்றி வாழ
அன்புடன் பேச
அரவணைத்து பேணிட
நல்லதைக் கற்றிட
அல்லதை விலக்கிட
விட்டுக் கொடுக்க
வேதனையைப் போக்கிட
உறவுகள் நாளும்
உதவுவர், நிலையாய் !
உறவுகள் சூழ
உயர்வாழ்க்கை அன்று.
அடுத்தடுத்து உறவினர்
ஆசையாய்க் கூடுவர்.

நல்லதை நடத்திட
அல்லதைத் தாங்கிட
அழைக்கும் முன்னே
அடக்கமாய் வந்தே
முன்பணம் ஈந்தே
முன்னேற வழிகாட்டி
வேலைகளைப் பகிர்ந்து
விரைவாய்ச் செய்தே
அகத்தில் மகிழ்வும்
ஆனந்தமாய்க் கொள்வரே!
எல்லாம் தலைகீழாய்!
ஏளனப்பார்வையோடு இன்று
பணத்தின் பின்
பாங்காய் ஓட்டம்.

குணத்தை மதிக்காது
குறையைக் காண்பவராய்!
உறவைத் தேடினால்
உள்ளத்தில் அன்பின்றி
விடப் பேச்சு
விருந்தோம்பலின்றி
வெளிநடப்பு.
உறவை விரும்பாத
உறவுகளே மிகுதியாய்.

கவிஞர் செ. தலைவாணி, மேட்டூர்அணை

# சித்தனாகி ...



வழக்கொழிந்த வார்த்தையில்
மந்திரங்கள் பாடினீர்.

மறத்துப்போன கல்லுக்கு
மலர்மாலை சாற்றினீர்.

கறுவரை எனும்பெயரில்
கல்லறைகள் கட்டினீர்.

கடவுள் எனும்பெயரினில்
கல்லைவைத்து பூட்டினீர்.

இல்லையென்ற கடவுளை
எங்கெங்கோ தேடினீர்.

இதென்ன நியாயம்
என்னமாயம் மாந்தரே!..

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# தண்ணீர் எடுத்து வாரோம்; தாகம் தீர்க்கப் போறோம்

கேணியிலும் தண்ணியில்ல
கம்மாயும் வறண்டுடிச்சே
வெயிலும் வந்திடுச்சு
வேதனையும் கூடியிருக்கே

சூரியனும் உக்கிரமாயிருக்கு
வியர்வையும் வழிந்தோடுது
தொண்டைக்குழியும் காயுது
தாகத்தாலத் தவிக்குது

தலையிலப் பானையத்தான்
சொமந்துப் போறோம்
ஆற்றைத் தேடித்தான்
காலாற நடக்குறோம்

தொலைதூரம் இருக்குது
மேனியெல்லாம் நோகுது
மரங்களையும் காணோம்
மண்டையும் பொளக்குது

பாழானப் பாதையில
பாதமும் பொசுக்குது
நம்பிக்கையாப் போறோம்
நித்தமும் நடக்குறோம்

பசுமை எங்குமில்ல
தரிசாத்தான் இருக்குதே
வான்மழையும் பெய்யாதோ
வாட்டமும் தீராதோ



கானல்நீரும் மாறாதோ
கவலையெல்லாம் போகாதோ
விவசாயம் செழித்திடவே
எல்லோரும் பாடுபடுவோம்

பூமியும் குளிர்ந்திடுமே
நீரோட்டம் வந்து விடுமே
தண்ணீர் எடுத்து வாரோம்
தாகம் தீர்க்கப் போறோம்.

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உடைந்த நாற்காலி

இனத்தோடு தான்
இருக்கிறேன்.
அரங்கிற்கு வருபவர்
ஒருவரும்
என்னைச் சீண்டவில்லை.

நான்
நன்றாக இருந்த போது
மறுப்பின்றி
பலரைச் சுகமாய்
சுமந்திருக்கிறேன்.

என் தற்போதைய
நிலைக்கு
உங்களில் ஒருவரே
காரணம்.

தயவுசெய்து
என்னை
அப்புறப் படுத்துங்கள்.
இல்லையேல்
எரித்து சாம்பலாக்கிடுங்கள்.

இருந்தும்
பயனற்று இருக்கும்
வாழ்க்கையின் வலி
கொடியது.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# சாதனை

சாதனைக்கு எல்லை
இல்லை - நீ
சாதிப்பது
எவருக்கும் தொல்லை
இல்லை.

சோதனைகளை
கடக்கும் இதயத்தின்
இருப்பிடம்.



கருமேகத்திற்குள்
சூரியன் மறைந்திருக்கும்.
இருப்பினும்
அதன் ஒளி
பூமிக்கு
கிடைக்காமல் போவதில்லை
அது போல்
உனக்குள் இருக்கும்
திறமைகளும்
இந்த உலகிற்கு
ஓர் நாள்!
ஒரு நொடி!
அறிய கிடைக்கும்.

கவிஞர் திருமதி மோகனீ, நாவலப்பிட்டி

# முகங்களின் முகம்

முகங்கள் ஒவ்வொன்றும்
இருக்கிறது விதவிமாய்!
இரட்டையராக பிறந்தாலும்
இருக்கவே செய்கிறது முகங்களில் வித்தியாசம்!
ஒவ்வொரு முகமும் ஒரு பாவனையை
வெளிக்காட்டிக் கொண்டே இருக்கிறது.
ஒப்பனையற்ற முகங்கள் கூட
வசீகரமானதாக இருக்கிறது.
சூழ்நிலைக்கு தக்கபடி வெளிப்பாடுகளை
மாற்றும் தந்திரங்களை
சில முகங்கள் அறிந்து வைத்திருக்கிறது.
கல்வெட்டாய் மனதில் தங்கிவிடுகிறது
ஒரு போதும் மறக்க முடியாத
சில முகவெட்டுக்கள்.
காரணங்கள் தெரியாமல்
திடீரென்று நெருக்கமாகிப் போகிறது
சில முகங்கள்.
காரணம் புரியும் முன்பே
விலகிச் சென்று விடுகின்றன
வேறு சில முகங்கள்.
சில முகங்களில் மட்டும்
துரோகத்தின் சுவடுகளை
தாங்கிக் கொண்டே இருக்கிறது சில முகங்கள்.
நம் புன்னகையை பெற்று
நமக்கு புன்னகையை பிரதிபலிக்க
சில முகங்கள் முயற்சித்துக் கொண்டே இருக்கிறது.
குழந்தைகளின் முகங்களில் மட்டுமே
தெய்வீகமாக ஒளிர்கிறது.
எங்கேயோ, யாரோ சிலர் மாத்திரம்
உள்ளும் புறமும் ஒரே முகத்தை
சிலையாக வைத்திருக்கிறார்கள்!



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# நீர்

மழை நிரப்பிய ஆறுகள்
நீர் உதிரிந்து அம்மணமாய்!
மணல் அள்ளும் ஊர்திகள்.

பயிர் கருகி வீழ
பசுமை இழந்த வயல்.
போக்கு மறந்த பறவை
பட்டுப்போன அடவி!

துள்ளி குதித்த குளம்
தூர் வறண்டு போனது.
மழை முத்தமிட
காத்திருக்கும் நிலம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# விடியலே வா!



வயிற்றில் பசி
அறியத்துடிக்கும் ருசி
கிடைத்தை புசி
எப்படியேனும் வசி

உழைப்பின் வியர்வை
தந்ததோ அயர்வை
வாழ்வின் உயர்வை
காண்போமோ மலர்வை.

கண்களில் ஏக்கங்கள்
களைந்திடுமோ ஆக்கங்கள்
கனவுகளோ ஆயிரம்
கரையேறுமோ விபரம்.

அடிமை வாழ்வு
அழித்தே ஒழித்திட
அவனியில் என்றும்
அல்லாடும் சஞ்சலம்

நல்வாழ்வு தேடியே
நல்லவர்களை நாடியே
நற்பயன்கள் பெற்றிட
நாளும் முயற்சியே.

விழிநீரில் தேக்கங்கள்
விள்ளாத சோகங்கள்
நனைந்திடும் இதயங்கள்
நலிந்திடாதோ வலிகள்

விடியலைத் தேடியே
விரைந்தே பயணங்கள்
விலகியே செல்லும்
விந்திய உயரங்கள்

நாங்களும் காணுவோம்
நாள்தோறும் வளர்ச்சி
இன்றே தொடங்குவோம்
இனிய அடிப்படைகளையே.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# கவிக்கோர் கவி

வடுகப்பட்டியில் பிறந்தவனாய் கருப்பு தங்கமாய்
வைகறைக்கு மேகமாய் கவிராஜாவின் கதையாய்
இரத்தத் தானமாய் தமிழுக்கு நிறமாய்
பொய்யென பெய்யும் மழைத் துளியாய்
கொடி மரத்தை தாங்கும் வேராய்
எல்லா நதியிலும் எங்களின் ஓடமாய்
திருத்தி எழுதிய தீர்ப்பாய் நின்றாய்
காவி நிறத்தில் ஒரு காதலாய்
கள்ளிக் காட்டு இதிகாசத்தின் நினைவாய்
கருவாச்சிக் காவியமாய் மூன்றாம் உலகப்போராய்
சிகரங்களை நோக்கியே நாளும் வளர்ந்தாய்
நீ எழுதிய வரிகள் ஒவ்வொன்றாய்
படித்ததில் உயிரோட்டமாய் ஆனது வாழ்க்கை



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# உனக்காக எழுதுகிறேன் என் உணர்வுகளை எழுதுகிறேன்

உனக்காக எழுதுகிறேன்
என் உணர்வுகளை எழுதுகிறேன்

என்னோடு பேசுவதை நிறுத்தி விட்டாய்,
ஆனாலும் கிழமையில் ஒரு இரு நாள் வந்து
இன்னும் உன்னில் காதல் உண்டு என கூறுகிறாய்



உன்னை மட்டுமே காதல் செய்கின்றேன்
என்றும் கூறுகிறாய்

நம் காதல் சேராத காதல் என்று
உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும்
அதனாலயா இப்படியெல்லாம் செய்கின்றாய்

என்னை விட்டு விலகி விடவும் முயற்சி செய்கிறாய்
உன் முயற்சி தோற்றுத்தான் போகிறதா?

பெண்ணே!
நானும் இன்னும் உன்னைத்தான் காதல் செய்கிறேன்
உன் அன்பிற்காகத்தான் ஏங்குகிறேன்

உனது சந்தேக சண்டைக்காக தவம் கிடக்கிறேன்

அடிக்கடி வந்து காதலை சொல்கிறாய்
அடிக்கடி அன்பையும் தந்து விட முடியாதா

கருணை கொஞ்சம் காட்டடி
தயவு செய்து
கருணை கொஞ்சம் காட்டடி

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# ஏகனின் நீதிப்பட்டயம்

அடுத்தவன் பொருளில்
ஆசை கொள்ளாதே
அதைப் பிடுங்கி
அசிங்கமாய் வாழாதே
°°°°°

கிலோ என்ன விலை
கேட்கும் மனிதர்
நிறுத்து விற்கவோ
நீதியும் நியாயமும்
°°°°°

பேச்சு தோறும்
பூக்கள் மணக்கும்
நெஞ்சம் எல்லாம்
புலால் வெடுக்கு
°°°°°

குழி பறித்து
கோபுரம் எழுப்புவார்
வழி தெரியாதார்
விழுந்தே தொலைப்பார்
°°°°°

முலாமிட்ட முகங்காட்டி
முகமன் கூறுவார்
சலாம் போட்டபடியே
சகலதையும் சாதிப்பார்
°°°°°

வருணனையில் வாழ்த்தியே
வாகாய் வரவேற்பார்
கருணையின்றிப் பிடுங்கியபின்
போவென்றே இழிப்பார்
°°°°°

ஏமாந்த பின்னர்
ஏது பலன்?
ஈனத்தனம் அறிந்து
இருந்திடுவாய் சூதானமாய்
°°°°°

சந்து பொந்தெல்லாம்
அதிகரிக்கும் வேட்டை
சிந்து பாடித்திரியும்
பச்சோந்திகள் கூட்டம்
°°°°°

முட்டாள் என்றும்
முட்டாள் அல்ல
தட்டிக்கேட்க ஒருநாள்
தைரியமும் வரும்
°°°°°

ஏமாந்த பின்னர்
எழும் உறைப்பு
எட்டிக் காயெனவே
உள்வரும் கசப்பு
°°°°°°°

இலாப நோக்கத்தில்
எதையும் செய்யாதே
இறைவழியில் என்றும்
இணைந்தே வாழ்
°°°°°°°

உடல் பொருள் ஆவி
அவனுக்கென்று ஆனபிறகு
உள்ளத்தில் கலக்கம்
உருவாவதும் ஏனோ?
°°°°°°°




தெள்ளத்தெளிவாய்
தோட்டத்தில் மூழ்குவாய்
அள்ளக் குறையாத
அருளினைப் பெறுவாய்
°°°°°°°

ஏமாறுவதும் இழிவடைதும்
இவ்வுலகில் மட்டும்தான்
ஏகனின் நீதிப்பட்டயம்
ஏகுமுலகில் மகிழ்வாய்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# பெண் பாதுகாப்பு

பண்பாடு மறந்து பாதகம் செய்யாதே
பார்ப்போர் மறுக்கலாம் படைத்தவன் மறப்பதில்லை
ஆணுக்குப் பெண் சமனென்றே நியதி
ஆடவர் மட்டுமே அரங்கமேற வேண்டுமா?
கருவறையில் நீயமர இடம் தந்தவளும் பெண்தான் என்பதை
உணர்ந்தாலே தரக்குறைவாய் வாய்கள் பெண்மேல் பேசாது
கேலிக்கிண்டல்களும் ஆபாச பார்வைகளும்
உன் உறவாய் நீ நினைத்தாலே
உன் நெஞ்சில் குடிக்கொள்ளாது
ஒவ்வொரு இதயங்களும் இப்படி நினைத்தாலே
உலகில் ஆஷிபாக்களுக்கும் வித்தியாக்களுக்கும்
இனி வரலாற்றில் இடம்பெற இடமிருக்காது
தாயே ஆண் மகனுக்கு கற்றுக்கொடு
உதிரக்கட்டியிலிருந்தே நீ பிறந்தாய்
உதிரத்தையே பாலாய் அருந்தினாய்
பெண்ணின் உதிரப்போக்கொன்றும்
தீட்டல்ல என்று சொல்லி வள
நாளைய சமூகம் பெண்களின் பாதுகாப்பைத்
தானாய் வழங்கும்.



கவிஞர் ஷியாஸ்னா ஃபைஸல், நாவலப்பிட்டி

# நீ

தமிழ் உரைநடையின் சிறப்பை உணர்த்தியவர்-
மறைமலையடிகள்.
ஆங்கில உரைநடையின் சிறப்பை உணர்த்தியவர்-
வில்லியம் டிண்டேல்.
கணிதத்தின் சிறப்பை உணர்த்தியவர்-
இராமானுஜம்.
அறிவியலின் சிறப்பை உணர்த்தியவர்-
கலீலியோ.
வரலாற்றின் சிறப்பை உணர்த்தியவர்-
ஹெரோடோடஸ்.
என்னுடைய கவிதையின் சிறப்பை உணர்த்தியவர்-
நீ,நீதான்,
நீமட்டும்தான்.



கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

1. உதயகுமரன், மணிமேகலை

பளிக்கறையுள் கண்டது பளிங்குச் சிலையா? மணிமேகலையா?
தெளிவில்லாமல் குழம்பினான் குமரன்,அவ்விடம் விட்டு. போகாமல்
ஒளிதங்கிய அம்மண்டபத்தை சுற்றிச் சுற்றி வந்தான், பித்தனானான்
வெளியில் இருந்து நோக்கும் இடமெல்லாம் மேகலையாக தெரிந்தாள்

2. உதயகுமரன், சுதமதி

"இளங்கொடி உன் தோழி மணிமேகலை எப்படிப் பட்டவள்?"
"இளவரசே, சூரனைக்கொன்ற முருகணைப் போல் தோன்றுகின்றாய்
பவளக் கொடியாள் மணிமேகலை மீது காதலில் அலையலாமா?
அவள் முன்வினைப் பயனால் தவநெறியில் வாழ்ந்து வருகிறாள்"
"இளவயதிலேயே காமனை வென்றவள் , அவளை விட்டுவிடு"என்றாள்

செழுமையான நீர் அளவு கடந்து பாய தடுக்க முடியுமா அதேதான்
சூழ்ந்திடும் காமத்தை அடக்கி புறம் தள்ள முடியுமா யோசி
தழுவிடும் அறவாழ்க்கை என்னிடமிருந்து தொடரலாமே கூறு
பழுதுபடாமல் அவளை நான் பின் தொடர்வேன் , பதில் சொல்
கழுகு விஞ்சையனால் கைவிடப்பட்டவளே இங்கு என்ன வேலை?



3. சுதமதி பதில்

நின் கடமை அறிந்து செயல்படு, தீய வழியில் செல்லாதிருப்பாயாக
என் தந்தை பார்ப்பன முதுமகன், என் தாயை இழந்து தனி மரமானார்
என் மீது மாறாத அன்பு கொண்டவர். தன் மகளைத் தேடி அலைந்தார்
என்னை இங்கே கண்டார், "மகளே இந்த இடம் எவ்வாறு வந்தாய்?"

நடந்ததைக் கூறினேன் கேட்ட அவர்,"இனி நான் இருக்கிறேன்" என்றார்.
"கடந்ததை விடு" வீடுகள்தோறும் பிச்சை எடுத்துக் காப்பாற்றினார்
இடம் மாறாமல் சீராக சென்ற வாழ்க்கையில் ஒரு நாள் அது நடந்தது
திடமான பசு தறிகெட்டு ஓடி என் தந்தையை முட்டி கீழே சாய்த்தது

அவர் குடல் சரிந்து இரத்தமாக தரையில் வீழ்ந்தார். கண்டவர் ஓடி வர
அவரை நான் இருந்த சமணப் பள்ளியில் கொண்டுவந்து சேர்த்தனர்
இவர் இங்கு இருக்க தகுதியற்றவர், சிகிச்சை அளிக்க மறுத்தனர்
எவரும் காப்பாற்ற முன் வராமல் என்னையும் வெளியே அனுப்பினர்

அப்போது அங்கு வந்த சங்கதருமன் தந்தையை தூக்கிச் சென்றார்
எப்போதும் கனிவான புத்த முனிவர் தவச்சாலையில் சேர்த்தார்
அப்பாவை இறப்பில் இருந்து நீக்கி அவரைக் காப்பாற்றினார்
ஒப்பற்றபெருந்தகை புத்த தருமத்தை அருளி தங்க வைத்தார்.

"அற்புதமாக பேசும் ஆயிழையே, உன் வரலாறு அறிந்தேன்
தற்பெருமைக்காக பேசவில்லை , என் காதலி மணிமேகலை
கற்பில் சிறந்த அவளை எப்படியும் அடைத்தே தீருவேன்
சிற்பமாக அவளை மனதில் செதுக்கிவிட்டேன் போய் கூறு"

பளிக்கறை திறந்து வெளியே வந்த மணிமேகலை கூறினாள்
"துளியும் கர்வம் இன்றி என் பின்னே ஓடி வருகிறான் குமரன்
வளிபோல் சுற்றி வரும் அவன் பின்னே என் மனம் ஓடுகிறதே
எளிதில் அவன் வசமானேன், இதுதான் காதலா?" மணிமேகலை

இந்திர விழாவைக் காண வந்தது மணிமேகலா தெய்வம்
மந்திரம் போட்டது போல் மணியின் அழகில் மயங்கினாள்
இந்த மாதுவை காம நோயில் இருந்து காக்க வேண்டும்
வந்தாள் மணிமேகலா தெய்வம் பெண்ணுருவில்.

...தொடரும்

கவிஞர் ந.திருக்கோமு

# பாரதி

எட்டயபுரத்தில் தோன்றிய எட்டாக் கனியே
தமிழ் வளர்ச்சிக்கு உம்பங்கு தனியே
ஆணாய் பிறந்தாலும்
பெண்ணடிமையை விரும்பாய்
ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி வையம் தழைக்கும் என்றாய்
மண் விடுதலையும் பெண் விடுதலையும்
உமதிரு கண்களாக என்றும் கொண்டாய்
கேளாச் செவிகளையும் கேட்க வைத்தாய்
தேனின் இனிமையை பாட்டில் வைத்தாய்
பெண்ணைப் பூட்டி வைத்த மாந்தருக்கு
பாட்டுத் திறத்தால் வேட்டு வைத்தாய்
தேசிய கவிஞராய் பாரே போற்றியது
தேச விடுதலையை மூச்சாய் கொண்டாய்
தொலைநோக்குப் பார்வை என்றும் உமது
எளிமைத் தமிழை உனதாய் கொண்டாய்
வலிமை இதனால் நீயே கண்டாய்
எட்டுத்திக்கும் அலைந்து திரிந்தாலும்
தமிழைக் கலையோடு
வளர்க்கத் தெரிவித்தாய்
மகாகவியே உன்னை வணங்கி மகிழ்கிறேன்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# மகளே கண்ணுறங்கு



ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

திருமகள் உனக்கு திருக்குறள் புகட்டிட
திருமகளே நீயும் கேட்டுக் கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

மலைமகள் உனக்கு மயக்கும் கதைசொல்ல
மைவிழி மகளே மகிழ்ந்து கண்ணுறங்கு!

அலைமகள் உனக்கு ஊஞ்சல் ஆட்டிவிட
அசந்து நீயும் அழகாய் கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

மண்மகள் உனக்கு மலர்ப்பந்தல் போட்டுவிட
மணம்நாசி நுகர்ந்து மகளே கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

பூமகள் உனக்கு பூப்பாய் விரிக்க
பூவிழி மகளே கண்மூடி கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

கலைமகள் உனக்கு கருத்தாய் வழிசொல்ல
கண்மணியே நீயும் கலங்காமல் கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

பொன்மகள் உன்னை பொறுப்பாய்க் காத்திட
பொன்மகளே நீயும் பூரிப்பாய் கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

பண்மகள் உனக்கு பாமாலைப் பாடிட
பண்பான என்மகளே பாங்காய் கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

விண்மகள் உனக்கு விந்தை காட்டிட
வியப்பான என்மகளே விழிப்போடு கண்ணுறங்கு!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

கவிஞர் திருமதி மோ. கோமளாநேத்ராஜி

# பெற்றோர்

உணர்வாலே காதலித்து உள்ளத்திலே ஊற்றெடுத்து
உயிர் தந்து உருக் கொடுத்து உருவாக்கிய ஈருயிர்கள்
ஈரைந்து மாதங்கள் கருவிலே சுமந்து
உணர்வாலே அசைவெல்லாம் தொட்டணைத்து
வலி கொண்டு உதிரம் சிந்தி மறு ஜென்மம் கண்டு
இனிதாய் ஈன்றெடுத்து மூச்சடைக்கி முத்தம் இட்டு
மார் மேலே சீராட்டி தோள் மேலே சீர்தூக்கி
நாம் காணாதவை எல்லாம் கான் என களிக்க விட்டு
கலியிலும் களி கொண்டு ரசித்த இரு உயிர்கள்
தன் சுகம் அறியாது நம் சுகமே மகிழ்வெனக் கொண்டு
வேதனைகள் பல வந்த போதும் சோதனைகள் சூழ்ந்த போதும்
சோர்விலா மனம் கொண்டு சொர்க்கத்தில் மிதக்க வைத்தீர்
கண்ணருகே உருவம் கொண்ட கடவுளாய் கலந்திட்டீர்
கை தூக்கி கட்டி அணைத்து கரம் கொடுத்து கரம் பிடிக்க
மனம் கொண்ட மாதிரியே வாழ்க்கை அமைத்து
தந்து விட்ட பிறகு அனைத்தையும் பெற்றவுடன்
பெற்றவரை மறக்கின்றோம்
உற்ற கடவுள் அவர்கள் மறப்பதை மறுத்திடுவோம்
பாராட்டி சீராட்டி சோறூட்டி போராடி வளர்த்திட்ட ஒளி விளக்குகள்
வலிகொண்டு மகிழ்வுடன் பெற்றெடுத்த தாயவளை
மாரோடு நீ சாய்த்து மகிழ்விக்க வேண்டும்
தோள் மேலே சீர்தூக்கி உலகை காண வைத்த தந்தையவனை
உலகமென நாம் போற்றி நித்தமும் வணங்கிட வேண்டும்
வயதான போதும் வளமாக எம்மை காத்தவரை
வயதாகும் நிலையில் கூட வளமாக பார்த்திட வேண்டும்
போராடி போராடி தம் வாழ்வை அர்ப்பணித்த தெய்வங்கள்
அவர்களின் போராட்டம் நிறைவுற்று முற்றுப்பெறும் போது
பொறுமை இழந்து பார்த்திட மறுக்கின்றோம்
உயிர் தந்தவளை உயிராக உருக் கொடுத்தவனை உணர்வாக
உதிரம் கொடுத்து காத்திட வேண்டும்
உலகப் புகழ் எல்லாம் கொடுத்து ஓய்வு பெற்று உறங்குகையில்
உன் மடி கொடுத்திடு வேறென்ன வேண்டும் தெய்வங்களுக்கு
மாய உலகில் மர்மமாய் மறையும் வரை
மாரோடு அணைத்திடு தாயாய் மாறி



*கவிஞர் சஜிரேக்கா சுதாகரன், திருகோணமலை (இலங்கை*

# மகிழ்வாக

குவிந்த சிப்பிக்குள் மழைத்துளி முத்தாக
குளிர்ந்த வயிற்றுக்குள் நானும் கருவாக
குட்டி தேவதையாக வந்தேன் வலமாக



குறும்பு விளையாட்டில் சிறுமியாக
குசும்பின் உச்சத்தில் தமக்கையாக

குருவிற்கும் நல் சிஷ்யையாக
குனிந்ததலையோடு பருவ பெண்ணாக

குடிலுக்குள் நல்ல குணவதியாக
குடும்பத்தின் குத்துவிளக்கொளியாக

குடும்ப உறவுகளுக்கு உதவிடும் தாதியாக
குடும்பிக்கும் நல் இல்லாளாக

குட்டிச்செல்லங்களின் கரும்புத்தாயாக
குற்றங்குறையில்லா நல் மனிதியாக

குச்சி பிடியும்போதும் நல் அனுபவப்பாடமாக
குழந்தையாக மாதாவிடம் முகிழ்தலிலிருந்து
குற்றுயிராக மண்ணில் சாயும் வரை மகிழ்வாகவே!

*கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்*

அந்த காட்டின் அமைதியை
எடுத்து செல்ல முடியாமல்
வீடு திரும்பி விடுகிறார்கள்,
பார்க்க சென்றவர்கள்.



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# தனிமை

வாழ்வில் எத்தனையோ சொந்தங்கள்
வந்த போதிலும் நான் தேடாமல் வந்த
என் இனிய தனிமையே.
என் வாழ்வில் அவ்வப்போது
வந்து செல்லும் ஆறுதலே.
சிரிக்கும் மழலை போல்
என்னை கொஞ்சி தவழும் தனிமையே.
என் வாழ்வில் நீ சொர்க்கமே.
எத்தனையோ உறவுகள் இருந்த போதிலும்
நான் உன்னை ஒரு தாயின் பாசத்தை
தேடும் குழந்தை போல்
இந்த தனிமையை தேடுவது ஏனோ.
எனக்கென்று வாழ்வில்
நிறைய போராட்டத்தில் மத்தியில்
சில விஷயங்கள்
கிடைத்த போதிலும்.
தனிமை மட்டும் கடவுள்
எனக்கு கொடுத்த பரிசாகும்
மாற்றானுக்கு இங்கு தனிமை சோகம்.
எனக்கோ இங்கு தனிமை!
தோல் கொடுக்கும் நண்பன்.



கவிஞர் டிரோன்–மருளபி, இலங்கை

# அந்திமக்காலம்



என்னிடம் இல்லாதது இல்லை
எனக்குத் தெரியாதது எதுவும் இல்லை!
உலகமே எந்தன் காலடியில்
என்ற இறுமாப்பு இளமையில்!
இளரத்தம் எதிலும் துணிந்து
இறங்கிடும்!
ஆடும் வரை ஆட்டம் போட்டு
வயது ஏறி, ரத்தம் சுண்டி
உள்ளம் துவண்டு வரும்போது
எண்ணிப் பார்த்து நம்மைத்
திருத்திக் கொள்ள!
வயோதிகம் ஒத்துழைப்பது இல்லை
அந்திமக்காலம் ஒன்று நெருங்கும் போது
கடந்ததை எண்ணி
கண்ணீர் விட்டு அழுது பயனில்லை!
இயற்கை பாரபட்சம் பார்ப்பதில்லை
யாருக்கும் இதிலிருந்து  விலக்கில்லை!
முடிவு  உண்டு என்று தெரிந்து பிறந்தோம்!
அந்திமத்தை அமைதியாய் ஆராதிப்போம்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

# பாரெங்கும் பவனி வா

அன்புள்ள சிநேகிதியே
எந்தன் ஆருயிர்த் தோழியே
உன் சீவியம் சிறப்பாய் அமைய
சிந்திப்பாய் தினமும் இங்கே!
***

அஞ்ஞான முடிச்சுக்குள்
இறுகிக் கிடக்கும்
உந்தன் உணர்வுகளை
ஒளி நிரம்பிய உணர்வுகளாக
உருவாக்கி எடுப்பதற்கு
சிந்தனை ஒன்றே உனக்குரிய
ஒரே வழியடி வாழ்விலே!
***

இதனாலேயே விழித்தெழு என்கிறேன்
விந்தை செய்ய
வீறுகொண்டெழு என்கிறேன்!
***

காரிருளுக்குள் வாழும்வரைக்கும்
உனக்கு வாசற்படிக்கு
வசந்தம் வராதே!
வாழ்விலே ஒளிபெற
விடியல் தராதே!
***

கல்வி ஒளி பெறுவதன் மூலமே நீ
காரிருள் அத்தனையும்
வென்று காவியம் படைக்கும்
காரிகையாய் நீ
புத்தொளி வீசலாமே!
***

அடியேய்
என்னுயிர்த் தோழியே.
உனக்கு விலங்கினை
முதலிலே இட்டதே நீதானே!
***



போதுமடி போதுமே
புத்துணர்வு பெறு!
புத்தகம் நித்தமும் தூக்கு
புதுமை செய்!
புதுமைப் பெண்ணாய் மாற்றம் பெறு!
பண்பாட்டில் உயர்ந்த பெண்ணாய்
பாரெங்கும் பவனி வா!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், இலங்கை

# விடுதலை

விடுமுறையைப்போல
விடுதலையைதான் நாடிநிற்கிறேன் இறைவா!

பாரினில் பிறந்து பாரமாகினோமோ இன்று
கனாக்களுக்குள் சிக்குண்டு மூச்சையாகி நிற்கிறேன்
விடுதலைத் தருவாயோ இறைவா!



அர்த்தமற்ற பார்வையில் வீழ்ந்து
கேள்வி பொதிகளை வீசுகின்றனரே

ஏதேதோ சொல்லி சமாதானம் செய்வதாகியும்
இனியும் சமாளிக்கும் மொழி தெரியாது நிற்கிறேன்

விடுதலைத் தாராயோ சாபம் தீர்த்து வைப்பாயோ
பாவத்தால் நிறைந்தாகியதோ
எனதாசையிலும் கனாவிலும் குறையாகியதோ

ஏன் இறைவா ஏனிந்த மௌனமோ?
புரியா மொழிப்பேசி வருத்தமே கூடிநிற்குதே

ஏன் இறைவா என் பிரார்த்தனைகள்
உன்னை எட்ட வில்லையா?

எட்டியும் தட்டி விடுகிறாயா
கேட்பதைக்காட்டிலும் சிறப்பொன்றைத்
தரத் தயார்ப்படுத்தலில் இருப்பாயா

எண்ணச்சொல்லித் தேற்ற
எதைச் சொல்லி மாற்ற
மறைந்து கிடக்கும் மறைமுகத்தை
திரையகற்றி பார்க்கத் தெரியலையே

வருத்தும் கனா கலையாதோ
பயமுறுத்தும் கனா தகராதோ
நின் நினைவலை விடுதலையில் மகிழாதோ

பொறுமையில் வெறுமையையுமே சூழாது போக
வேண்டித் துதிப்பில் நினைப்பும் கிடக்க
விடாப்பிடியாய் விடுதலை கேட்கக் கையேந்துகிறேன்
நின் நயனங்களும் பாரினில் சிறப்பாய்
நடைபோட வேண்டுமே இறைவா

கவிஞர் சஃஹீனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# துடிப்புறுமோ

விசும்பு தொடும் பருந்தும்
நிலம் பார்த்து அதிவேகமாய் பயணிக்க
கூச்சலிட்டு கொண்டாடும்
எல்லை கடந்த பேரானந்தம்..
புறைதப மனிதம் தாழ்வு மனம்
அகற்றியே மனிதத்தோடு கலந்துற நட்புற்று
நகைத்தும் கதைத்தும் குதூகலித்த
பருந்து போல் விசும்பு தொட்டனவே
அக எண்ண அலைகள்.
படிக்குஉறும் பருந்தோ உண்டோ
மண்ணிழிட்டு மிதிபடும் இருதயமோ
இளைப்பாறற்று மீண்டும் மீண்டும்
தென்படுமோ பார்வைதனில்.
முருகுஅகம் பொழிலாய் பசுமையுற
பூவை கொடுத்த மெல்லிய குறுநகையும்
மல்லலாய் மகிழ.
உயங்குதலின்றி மீண்டும் ஓர் பயணம்
விசும்பு பார்க்க.
ஊமைக்கிளியாய் ஔடதம்
தேடுதோ ஊசியிடமே.
துவரையாய் மணியாய் முத்தாய்
ஆர்கலியின் அகத்தோடு புதைந்த
விலைமதிப்பற்ற பொக்கிஷமாய்
அலையோடு ததும்பி மேல் மிதக்க.
பருந்தின் பாதத்தில் பிடிபட்டதோ.
யாருக்கும் பயனற்று படிக்குஉற
யார் பார்வைக்கு தென்படுமோ.
மதியம் காணுமோ.
கருமுகில் நனைக்குமோ.
வறண்ட இருதயம் மீண்டும் துடிக்குமோ.



கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# சத்தம் போடாதே

பெயர் தெரியாதா
பாடிக்கொண்டே இருக்குறாய்?
ஓ கவியா?
ராகத்தில் நீ பாடுகிறாய்
சோகத்தில் உழல்கின்றேன்
நிசி எல்லாம்
உன் கிசுகிசு
பசியால் பேசினாயா
ஊசி போல உணர்வு கொடுத்து
ஆசிர்வதிக்கிறாயா?
என்னை பிடிக்கும் என்று சுற்றி வருகிறாயா
இல்லை
உன்னை பழித்தீர்ப்பேன் என பதுங்குகிறாயா
என் இரத்தத்தில் தமிழ் வெல்லம் அதிகம்.
மெல்லும் உன் பல்லிடுக்கில் தமிழ் வெல்லும் .
சொல்லும் நாளை உன் உள்ளம்
அல்லும் அல்லலுற்றேன்
கொல்லும் உன் சபல புத்தி
கல்லும் கறைந்தது
நீ உறிஞ்சுவதைப் பார்த்து
தாகம் தீர்ந்ததா
ராகமா உன் யோகமா
சத்தம் போடாதே
நித்தம் புலம்பாதே

உறவாகி விட்டாய்
சிறகு கொண்டு பறக்காதே
மறவாதே நாளையும் வா
தருகிறேன் தானமாய் குருதி
பருகிக்கோ பல் இடுக்கில் சொருகிக்கோ.



கவிஞர் மதீரா, இலங்கை

# முகப்பரு

ரோஜா இதழ்கள் மேல்
பனித்துளி.
என்னவள் கன்னங்களில்
கன்னிப் பரு.



உன் முகம் கண்டு
தெரிந்து கொண்டேன்.
நிலவில் களங்கம் அல்ல
கருமைப் பருக்கள் என்று.

என் மேல் உள்ள காதலை
கண்களில் மறைத்தாய்.
கன்னம் காட்டிக் கொடுத்தது
மென் பருக்களாய்.

காதல் அணுக்களின்
அழுத்தம் கன்னங்களில்.
வெடித்து மின்னியது
முத்துப் பருக்களாய்.

பளிங்கு தரையில்
மிளிரும் சோழிகள்.
தேவி உன் கன்னத்து
குட்டிக் பருக்கள்.

உன் பருவம் காட்டியது
என் பருவம் மீட்டியது.
ஆப்பிள் கன்னங்களின்
அழகான பருக்கள்.

என் முத்தங்கள் முட்ட
முளைத்தன முத்துக்களாய்.
முகமெங்கும் சிதறிய
நட்சத்திரமாய் பருக்கள்.

கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# மனிதத்தின் பயன்

இதய நாளங்களில்
எங்கிருந்தோ பூத்த மனிதத்தின் பயனாக.

ஜன்னலில் இருந்த
சிலந்தி வலையை ஒட்டடை அடிக்க
மனம் வரவில்லை.

அன்றைய நாளில்
அம்மா சொன்னது போலவே..
இன்று இவனுக்கும் கிடைத்தது
புதுவீடு சில உறவுகள்

நீங்கள் சொல்லக்கூடும்
அதன் பெயர்
முதியோர் இல்லமென்று.

உணருங்கள்
உலக வாழ்க்கையில்
மனிதனும் சிலந்தியும்
வெவ்வேறல்ல



கவிஞர் ஜேபி நீக்கிழார், சென்னை

# என்றும் மறக்க முடியாதவை என்றால் நீங்களே!

அன்பு என்பது ஒரு சிறந்த பரிசு
அதைப் பெற்றாலும்
கொடுத்தாலும் சந்தோஷமே!

தாயின் பாசம் கண்களில் தெரியும்
தந்தை பாசம் தூங்குகையில்
புரியும் ஆனால் தேடி தேடி
அலைந்தாலும் கிடைக்காத
சொத்து தாய் தந்தை பாசம் மட்டுமே!

பலரும் நம்மை வீழவேண்டும்
என நினைத்தாலும் நான் என்றும்
உனக்கு துணை நிற்பேன்,
என கூறும் ஓர் மனம்,
நம்மை பெற்ற மனம் ஒன்றே!

தாய், தந்தை உறவு ஒரு சகாப்தம்
மறக்க முடியாத ஒன்று!
அம்மா தனக்காக சமைத்ததும் இல்லை.
அப்பா தனக்காக சம்பாதிப்பதும் இல்லை.

பசிக்கும் முன்பே உணவளிக்கும் தாய்.
விழும் முதலே கை கொடுக்கும் தந்தை.
இவர்கள் இல்லை எனில் நான் எங்கே?

அருகில் இருப்பதால்அன்பு
அதிகரிப்பதும் இல்லை
தொலைவில் இருப்பதால்
அன்பு குறைவதுமில்லை

எப்படி கதறி அழுதாலும் சரி
எவ்வளவு கோடி கொடுத்தாலும் சரி
திரும்ப கிடைக்காத நாட்கள்
நான் என் தந்தை தாயுடன்
சந்தோசமாக இருந்த நாட்கள் மட்டுமே!



அவ்வளவு அன்பையும்
மறக்க வைக்கும் கோபம்
எவ்வளவு கோபத்தையும்
மறக்க வைக்கும் அன்பு!

சிறு வயதில் என் தாய் தந்தையிடம்
நான் உணர்ந்த பாதுகாப்பை,
முதுமையில் என் தாய் தந்தைக்கு
உணர்த்தி விட்டால் போதும்,
என் மரணம் மகிழ்ச்சியாய் இருக்கும்.

முதன் முதலில் எழுதும் போது
கை பிடித்து எழுத வைத்தனர்
என் தாயும் தந்தையும்.
அவர்களை பற்றி
ஆயிரம் கவிதை எழுதினாலும் நிகராகாது.

*கவிஞர் ஜவ்பர் றிப்கா, அனுராதபுரம் (இலங்கை)*

# அன்புள்ள அப்பா

படித்து முடித்திட முடியாத
புத்தகம் நீ

ஒவ்வொரு ஏட்டிலும்
ஒவ்வொரு கதை

எத்தனை வலிகள் இருப்பினும்
அத்துனையும் உன்னுள்ளே

இல்லை எனும் வார்த்தைக்கு
அர்த்தமே இல்லை
அப்பாவின் அகராதியில்

அவருக்கென தனி ஆசையும் இல்லை
பிள்ளைகளின் ஆசையை
நிறைவேற்றுவதே தன் ஆசை

தோற்றத்தில் முரடனாய்
இருந்தாலும் மனதளவில்
அவர் குழந்தையே

அல்லும் பகலும் உழைப்பார்
ஒருநாளும் அவருக்கென
உழைத்ததில்லை

அப்பாவின் அதிகபட்ச ஆசை
பிள்ளையின் வெற்றி காண்பதே.



பிள்ளைகளை ஏணிப்படியில்
ஏற்றிவிட்டு ஏறிட்டு பார்த்து
மகிழும் அன்பு நெஞ்சம் அப்பா

முதல் தோழனும் அவரே
முதல் ஆசிரியரும் அவரே

அறிவுரை பல கூறினாலும்
அன்பிலே கொஞ்சமும்

குறைவில்லா நெஞ்சம் அப்பா
நிகரில்லா பொக்கிஷம்!அப்பா

கவிஞர் ஜோ.மஞ்சு.மருங்கூர்

# பேருந்து ஓட்டுநர்

வளைந்து நெளிந்து செல்லும்
கரியநிற வகிடு போன்ற
தார்சாலையின் இருபுறமும்
வரிசை கட்டி வாளிப்பாக
வளர்ந்த மரங்களையும்
மலைமுகடினை உரசி
மையல் கொண்டு தவழ்ந்து
மகிழும் மேகங்களின் அழகையும்
அளவாய் வளர்ந்த நாற்றுகள்
தென்றலின் வருடலில் பச்சை
அலைகளாய் அசைவதையும்
பால்முற்றிய செந்நெல்லின்
பச்சைவாசனையும் என்றேனும்
அனுபவித்து சிலாகித்ததண்டோ
எவரும் அறிந்திருக்கவில்லை
எண்ணித் துணிக கருமமாய்
கடமையாற்றும் ஓட்டுநருக்கு
நாளும் கிழமையும் உண்டோ?
இரவும் பகலும்தான் உண்டோ?
பயணிகளின் பயணத்தை
இனிமையாக்கி பத்திரமாக
இறக்கிவிடும் பேருந்துஓட்டுநருக்கு
சிரம் தாழ்ந்த வந்தனங்கள்.



கவிஞர் லீலாதேவிஅருணாசலம், நாகர்கோவில்

# மௌனம்

உதடுக்கு பூட்டுப்போட்டு
உள்ளம் திறந்து பேசும் அமுதமொழி!
ஓசைகள் இல்லாமல்
ஆசைகளை அடக்கும் அற்புதமொழி!

வார்த்தைகளுக்கு தடைப்போட்டு
மனதுக்குள் விடைச்சொல்லும் பாசமொழி!
மனக்கவலை மட்டுமல்ல
மரணத்தைத் தள்ளிப் போடும் மருந்து!

உடலுக்கும் உள்ளத்துக்கும்
ஊக்கமூட்டும் உயிருள்ள விருந்து!
ஆன்மீக வாழ்வின் அடித்தளம்!
அகிம்சையை அள்ளித் தரும் வான்மேகம்!

அக இருளை அகற்றும் இளங்கதிர் !
ஆன்மாவில் ஊடுருவும் அற்புத ஆற்றல்!
நம்மை நாமே தரிசிக்கும் தர்மகோவில்!
பிரச்சினைகளை தீர்க்கும் நீதிமன்றம்!



வார்த்தைகள் இல்லாத புத்தகம்!
வாழ்க்கையை எடுத்துரைக்கும் தத்துவம்!
மௌனம்! மௌனம்! - அது
புதிய விடியலின் ஜனனம்!

உடற்பயிற்சி உடலுக்கு உறுதியளிக்கும்!
உளப்பயிற்சி உள்ளத்துக்கு உணவளிக்கும்!
மௌனம்! மகிழ்ச்சியின் புதிய வெளிச்சம்!

இதழ்களை இறுக மூடினால்
நம் இதயம் இனிமையாகும்!
இதழ்களை முதலையாக்கினால் - நம்
இதயம் தடுமாறும் ஓடமாகும்!

*கவிஞர் அ. இராபர்ட்கென்னடி, காஞூர்*

# மலர்கள்

பனித்துளி ஏந்தி
பருவம் நனைந்திருக்கும்
பார்ப்போர் அனைவரையும்
மணத்தால் மனதை ஈர்க்கும்
நன்மையிலும் தீமையிலும்
தோல் சேரும் தோழனாகும்
வரவேற்புக்கு வரதட்சணை
பிறப்பு முதல் இறப்பு வரை
இன்றி அமையாத ஒரு பொருளாகும்.



கவிஞர் பரிமளா மணி, இலங்கை

# தடம் மாறும் தூண்கள்

மனிதம் போற்றும் மனமே
மாறுதல் மட்டும் பணமே.
தேர்தல் நெருங்கும் களமே
தெளிவாய் முடிவெடு மனமே.

வாழ்க்கைப் பாதை போராட்டம்
வாழ்க்கைக்காக போராடு.
போதையை கொடுத்து
பாதையை வளர்க்கும் களத்தை
தலைவணங்க வேண்டாம்



பரிகாரம் எல்லாம் பரிகாசமாகி
பாதை மாறிய தேடல்களை
தொலைத்தது பல மனங்கள்
வெட்டிப் பேச்சும் வேகாத தத்துவமும்
யாரை வாழ வைக்க போகிறது

தனிமனித வளர்ச்சியே சமூகம்
உழைப்பை பலமாக்குங்கள்
ஆயிரம் கதவுகள் மூடினாலும்
நமக்கான ஒரு வழி
இருக்குமென மறவாதீர்.

இது கலியுகம்! என்பர்
பலியுகம் ஆகாமல் காப்போம்
பள்ளிச் சிறார்கள்
வகுப்பில் மயக்க நிலையென பகிர
தயக்கநிலையில் ஆசான்கள்!
கதையல்ல நிசமாய் கேட்க!
பதறும் நெஞ்சம்
பதில் கூற முடியா பஞ்சம்.

கவிஞர் வ. சு. கலைவாணி, நெய்வேலி

# மாற்றம் ஒன்றே தான் மாறாதது

தனித்து காதல் செய்தான் அவளை
மடக்கிக் கொள்ள மண்டியிடவும்
தயங்கவில்லை அவன்.
காலம் கடந்து மனம் மாறி
வலையில் அவளும் மாட்டிக் கொண்ட
பின் அவனா இவன் என
வியக்கும் அளவிற்கு மாற்றம்.
என்றும் எதிர்ப்பார்த்திடாத நிலை உருவானது.
அவனளவில் பேச்சுக்கள் குறைந்து போனது.
அவளளவில் தேடல்கள் அதிகரித்துப் போனது.
புரிகிறது நிராகரிப்பு;இருந்தும்
அதனை ஏற்க உள்ளம் மறுக்கிறது.
தேடி வந்தவனே தேட வைத்து
விட்டு தொலைந்து போவது
எந்த விதத்தில் நியாயமாகும்?



கவிஞர் சன்ஹா நிஜாம், புத்தளம்

# தயை புரியாயோ

வலிந்து இமை தாழிட்டும்
வம்படியாய் செவிவிழும்
கூச்சல்

வாரித் தந்தாலும்
வழித்தெடுத்துப் போகும்
வக்கிர புத்தி குணம்

வாடாத போதும்
வேரோடு தீயிடும்
வளங்களை தின்ற குடல்

வாட்டியே தந்தாலும்
வக்கனை கேட்கும் மனம்
வழிவிடாது மறுதலிக்கும்

நினைவுகளின் பாதகம்
நிமிடந்தோறும் வாட்டிப் போகுது
தயை புரிவாயோ



கனவுகளை கேட்காது
கருவிழி உருளுவது
கண்ணயர மட்டுமே
எம் இறையே

திருநீறுடை பாதம்
தீரும் யாவும் அவன்பதம்
பணிந்தோர் சிரமே!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# பயணப்படு

காய்ந்த இலை சருகுகளை கடந்தும்
காய்ந்து கிடக்கும் நிலத்தின் மீதே நிமிர்ந்து நடந்தும்

புளிய மரத்தடியினில் படுத்து உறங்கியும்

புளிய பிஞ்சுகளை பறித்து ருசித்தும்
வாய்க்கால் நீரை அள்ளி பருகியும்

வரப்பு நீரில் நண்டு பிடித்தும்

கம்பங்கூலும் சுண்ட கருவாடும்
கண்மாய் கரையில் காத்துக் கிடக்கும்
கரையேறி வந்து கை நனைத்திட அழைக்கும்

தொண்டைக் குழியில் வைத்தால் தேனாய் ஊறிடும்
தென்னங்கீற்றும் தெம்மாங்கு பாடும்

குளத்து மீனும் தாவி குதிக்கும்
குரங்கு குட்டியும் கும்மாளம் போடும்

இந்த வாழ்வு போதுமே

வா! தோழா! வாழலாம்.



கவிஞர் கு. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, மதுரை

# மிதக்கும் உணர்வு

காற்று போலே
தீண்டி தீண்டியே தினமும்
மெல்லிய சுவாசத்திலே
கலந்த கனவாய்



காலங்களின் மாற்றம்
குவிகின்ற நெருக்கத்திலும்
முரண்பட்ட ஊடுருவல்

மிதக்கின்ற உணர்வுகளில்
ஆசைகளை
அணைத்துக் கொள்ளும்

தரங்கள் என்பதேது அங்கே
தலைக்கணம் கூடாத
கூடாரத்தின் நுழைவுகள்

எண்ணியது அங்கே
கைச்சிறை கடிவாளத்தில்
விடியல் வந்து முகந்துடைப்பில்
விழித்திரை பிடிவாதம்

அழகிய திரைக்கலைய
மறுக்கும் மனோலயம்
விசுக்கென விந்தி தள்ளும்
உலர்ந்த உறக்கம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி

# பேரின்பம்



நட்டக்கல்லு நட்டக்கல்லுதான்
நட்டு வைச்ச நடுகல்லுதான்
நாட்டுக்காக உயிர்விட்ட
வீரனோட நடுகல்லுதான்
நடுகல்ல நாளும் கும்பிடு
நமக்கும் வீரம் வருமே

கூடான கூடிருக்குது
கூட்டுக்குள்ள விளக்கெரியுது
எரியும் விளக்க பார்க்காம
வெளியில தேடறான்
சுட்டக்கல்லு சுட்டக்கல்லுதான்
சுட்டக்கல்லும் சூடு அறியுமோ

வட்டக்கல்லு வட்டக்கல்லுதான்
இளசுக தூக்கும் இளவட்டக்கல்லுதான்
இளவட்டக்கல்லைத் தூக்கினா
கண்ணாலமுன்னு சொன்னாங்க
இளவட்டக்கல்லைத் தூக்கிதான்
கண்ணாலம் செஞ்சாங்க

எட்டநின்னு வேடிக்கைப் பார்ப்பதாரு
அட்டவீரட்டானம் நம்ம சிவனாரு
எட்டும்வகை சொல்லாம சொல்வாரு
கிட்டிவிட்டா எப்பவுமே பேரின்பந்தானே

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# சொட்டை

பத்தாம் வகுப்பு அரசுப்பொதுத் தேர்வுப்பணியில்
பறக்கும்படை உறுப்பினன் நானென்பதாலாங் கிலத்தேர்விற்கே
படிக்காத மேதையவர் பெயர்கொண்ட பள்ளிக்கு
பறந்துசென்றேன் இருசக்கர வாகனம் யமகாவிலே!

பறந்து சென்ற களைப்பிற்கு இளப்பாறி
பள்ளி முதல்மணி ஓசையெழுப்ப வதுகேட்டு
பள்ளியின் மேல்தளம் மூச்சுவாங்க ஏறிச்செல்ல
பின்வந்த மாணவர்களில் யாரோ ஒருவன்
பக்கத்திலென்னைக் கடந்து செல்லும் போது
சத்தமாக கத்தினான் "டேய்சொட்டை" என்றே!

தேர்வறைக்குச் செல்லும்வேளை எழுந்தவந்தக் குரலால்
திகைத்துத்திரும்பிப் பார்த்தேன்கத்தியது யாரென்றறியவே!
மாணவன் ஒருவன் தலையில் சிறுவழுக்கை;
மயிர்களில்லையாங் கதுயேதோ பூச்சிக்கடியின் விளைவுபோலும்;
பறந்தே சென்றேன் வேறுவேறு வகுப்பறைகளுக்கே!



பறந்தாசென்றீர் வீணாய்ப்பொய் யுரைக்காதீரென நீவிர்
பகர்வது எந்தன் மந்தசெவிக்கும் கேட்கிறது;
எந்தன் நடையின் வேகம்பொதுவாய் ஆமையொத்தது;
இந்தநாளில் நான்பறக்கும் படையுறுப்பினன் என்பதால்
சற்று வேகமாய்ச் சென்றதால் பறந்தேனென்றேன்!

முதலொரு மணிநேரம் முடிவதென்ப தொருயுகமாய்
மனத்திற்கு இருக்கவடுத்த வொருமணிநேரம் நத்தையானது;
மிஞ்சிய நேரமது சடுகுடுவென ஓடியது;
தேர்வுப்பணியைச் சிறப்பாய் முடித்த மகிழ்வில்
தலைக்கு கவசமணிந்து இல்லம்நோக்கிப் பறக்க
எத்தனித்தவேளை மீண்டுமந்த குரலொலித்து கூடுதல்பலத்தில்,
"டேய்சொட்டை" என்று பலமுறை தொடர்ந்து!

இப்போது புரிந்துகொண்டேன் எம்பள்ளியின் பழையமாணவன்
இழித்துரைக்கிறானென் னையதுயேனென யறிந்திலேனாயினு
மதுமாணவனா யறிந்துமறியாமலும் நானுரைத்ததின் விளைவென்பதையே!

குறள் 319:
பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# தாய்

மரண அழுகையிலும் கூட
என் முகத்தை கண்டவுடன்
ஆனந்தம் கண்டாய்,
பசிக்கும் முன்
பந்தியிட்டாய்,
உன் முகத்தை மறந்து
என் முகத்தை அழகுபடுத்தி
புன்னகை கொள்வாய்,
எனக்காக சிரிப்பாய்,அழுவாய்,
எனக்காக உயிரையும் தருவாய்,
இப்படி இருந்த பொழுது நீ
தெரிய வில்லை
இறந்த பிறகுதான்
புரிகிறது
நீயே என் தாய் கடவுள் என்று....



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# எல்லாம் அழகே

நீல வானமும் நீந்தும் மேகமும்
கொள்ளை அழகு

மஞ்சள் வானமும் மறையும் கதிரவனும்
பேரழகு

செவ்வானமும் மறையும் அன்னமும்
கண்கொல்லா அழகு

கருப்பு ராணியும் வெள்ளை மச்சமும்
அழகோ அழகு

கும்மிருட்டும் உடுக்களின் அடுக்கும்
எத்தனை அழகு



நகரும் முகிலும் நண்பகல் நிழலும்
அத்தனை அழகு

புலரும் விடியலும் மலரும் சூரியனும்
அழகோ அழகு

மழை மேகமும் மாறிடும் பசுமையும்
கொள்ளை அழகு

வர்ணமும் வண்ணமும் வானில் கோலமும்
கோடி அழகு

வலைந்து தோன்றும்
பஞ்சவர்ண கிளியின் இறக்கையும்
கண்கொல்லா அழகு

கவிஞன் ரசனையோ வானிலும் நீளுமாம்
அழகுக்கு அழகாயே

*கவிஞர் அஸானா அக்பர், அநுராதபுரம்*

# மாலவனும்வைணவமும் - பகுதி 27

## பெரியாழ்வார் தொடர்ச்சி 10

பெரியாழ்வார் ஐந்தாவது பத்தினது இரண்டாவது
திருமொழியில் பாபத்தும் உள்ளம்உறை மாலிடத்து
தன்நோயை விலக்கற்காம்! அறுசீர்கொள் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தமாக பியாகடாபேர் ராகத்து
ரூபகப்பேர் தாளமமை இன்னருளைக் கூட்டுகின்ற
சுவைப்பாவே! மூன்றாவது திருமொழியில் ஈரைந்தும்
திருமாலிருஞ் சோலைதன் அழகர்தமை போகலின்றி
தடுத்ததனை அறுசீர்கொள் ஆசிரிய கழிநெடிலடி
விருத்தமாக ஸஹானாபேர் ராகமதில் அடதாள
பாவமைத்தார்! நான்காவது திருமொழியில் பதினொன்றும்
உளம்புகுந்த மாலவனால் கண்டநன்மை கூறிமகிழ்
களிப்புரைக்கும்! அறுசீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தப்பா ஸ்ரீராகம் திரிபுடப்பேர் தாளமாமே!
பெரியாழ்வார் துய்மங்களா ஸாஸனமாய் பனிரெண்டும்
ஐந்துபத்தில் முதல்பத்தில் ஒண்வொன்பது திருமொழியில்
நூற்றைந்தும் இரண்டினிலே பத்தெண்ணில் திருமொழியில்
நூற்றைந்தும் மூன்றினிலே ஈரைந்தில் திருமொழியில்
நூற்றைந்தும் நான்கினிலே ஐயிரண்டில் நூற்றைந்தும்
ஈற்றைந்தில் திருமொழிகள் நான்கதனில் நாற்பத்து
ஒன்றளவும் என்பதுவாய் நாநூற்று ஏழ்பத்து
மூன்றாக வட்டித்தார்! பிரபந்த துவக்கமதில்
பெரியாழ்வார் பாசுரங்கள் முதன்மைதனை பெற்றனவே!
யானைமேல் நீள்பவனி மாலவன்தான் காண்போதில்
கண்திருஷ்டி படுமென்று தன்மதலை என்றெண்ணி
கண்ஊறு கழித்ததனால் ஆழ்வாருள் பெரியவராய்
ஏற்றத்தைப் பெற்றாரே! தன்மகளை மணமுடித்து
மாமனாராய் முதிர்ந்தவராய் துலங்கினாரே! மாலவனாம்
கண்ணன்தனை தன்மதலை ஏற்றவர்தான் பிள்ளைத்தமிழ்
பதினெட்டு பருவங்கள் வட்டித்தார்! நூற்றைம்பதின்
மிக்கதுவாய்! ஏற்றங்கள் போற்றுவமே! மகிழ்வோமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# தண்ணீர்

உலகின் வியர்வையென ஊறும் அழகில்
உயிரின் வளர்தலே உயர்கிறது நாளும்
இயற்கையின் அதிசயமென இறைத்திடும் பொழுதில்
வியப்பிலாது தொழுதே காப்போம் கண்ணென.
தாகத்தின் தவிப்பைப் போக்கிடும் அமுதமாய்
மேகத்தின் பிள்ளையென பொழிந்தே நதியாகி
மண்ணையும் மக்களையும் மாண்புற ஆளாக்கி
எண்ணிடா வேலைகளில் இரத்தமென நிறைந்து
பாலையைப் பாலூட்டி பயிர்களைப் பெருக்கி
சோலையின் மேனியில் சொர்க்கத்தை விதைத்து
ஆலையின் நகர்வில் அடிப்படையென நின்று
வேலையின் விரைவிற்கு விறகென மாறி
நாளையைப் பிரசவிக்கும் நம்பிக்கையாய் மலர்ந்து
கண்ணீரைத் துடைக்கும் கடவுளென நிலைத்து
விண்ணும் வணங்க தன்னையே வழங்கிடும்
தண்ணீரின் பயணம் தடைபடாது காப்போம்.



கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# உலக தண்ணீர் தினம்

நீரின்றி அமையாது உலகெனின்
யார்யார்க்கும் வான் என்று அமையாது ஒழுக்கு
வான் சிறப்பில் வள்ளுவப் பெருந்தகையின் பொன் வரிகள்.
பிரபஞ்சங்களில் நீர் நிலம் காற்று ஆகாயம் நெருப்பு இவை
ஐந்தும் இவ் பூமியில் தோன்றச் செய்தது.
உயிர் வாழ மூச்சுக்காற்று முக்கியமானதோ
அதுபோலவே நீரும் முக்கியமானதே.
நீர் இல்லாமல் எந்த உயிரும் இயங்காது.
உணவு இல்லாமல் பல நாட்கள் உயிரோடு இருக்க முடியும்.
ஆனால் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழ முடியாது.
மனிதனுக்கு நீர் தேவை எப்படி அப்படியே
தாவரங்களும் விலங்குகளும்.
மழை பெய்யாது போனால்
வானவர்க்கு எடுக்கும் திருவிழாவும் நடைபெறாது.
நாள்தோறும் நடக்கும் பூஜையும் நடைபெறாது.
இவ்வருடம் நமக்கு போதிய மழை இல்லையே!
வரும் கோடை காலங்களில்
தண்ணீரின் சிக்கனத்தை தேவையறிந்து
செலவு செய்தோமானால்
இவ்வருட நீரின் பஞ்சத்தை தடுத்து
சரி செய்யலாமே!
நம் நாட்டின் அனைத்து நதிகளையும்
எல்லோருமாக ஒருங்கிணைந்து செயல்பட்டால்
எக்காலமும் தண்ணீர் பஞ்சமே வரவே வராதே!
நாடும் மக்களும் செழிப்புடன் இருக்குமே!
உலக நாடுகளின் உச்சாணி கொம்பிலே
நம் பாரத நாடு பெருமையுடன் வெற்றி நடை போடுமே!

*கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை*

# மன்றாடல்

மதி மயங்கிய நிலையில்
மமதையில் வரும் சொற்கள்
மனதை கிழித்தது
மருந்தொன்று தேடியே
மன்றாடி தினம் அலையும்.

மனக்கண்ணில் தோன்றிய
ஒளியில் மனம் லயித்து
அமைதியின் பிடியில்
அன்பைத் தேடும்.

மனிதரிடம் மன்றாடல்
தேவையற்ற ஒன்று
மனதில் இருளை நீக்கி
அகத்தில் ஒளிரும் தீபத்தில்
ஒன்று கலந்திடு மனமே.

ஆட்டுவிப்பவன் அவனே
அவனிடத்தில் தஞ்சம் கொள்.
பரம்பொருளை மனதில் நிறுத்தி
பதமலரை தொழுதிடு.
மன்றாடி தொழுதிட்டால்
மனதில் தெளிவும் பிறந்திடும்.



சிவமே, சிவமே
என் அகத்தில் நுழைந்திட்ட சுயமே
கண்மூடி நான் இருப்பேன் தவமே
நித்தம் தெரிவது ஒளி மயமே
இனி ,எனக்கில்லை பயமே.

*கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்*

# வாழ்வின் அருமை

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில்
நடக்கும் போர் வாழ்க்கை

எங்கு பிறக்கப் போகிறோம்? என்று தெரியாது
எங்கு இறக்க போகிறோம்? என்று தெரியாது

சில நேரம் வந்து போகும் மகிழ்ச்சி
ஆனந்தம் அடைந்து விடக்கூடாது.
எனென்றால்? அது நிரந்தரமானதல்ல.



சில நேரங்களில் வந்து போகும்
சோகம் முடங்கி விடக்கூடாது
எனென்றால்
அதுவும் நிரந்தரமானது அல்லது.

இப்படி ஏற்ற இறக்கத்தோடு
நம்மை ஏதாவது செய்து கொண்டே இருக்கும்
வாழ்க்கை.

இது பலருக்கு அமையும்
பலருக்கும் அமையாது

குழந்தைப் பருவம்,
இளமைப் பருவம்,
முதுமைப் பருவம் ,
என வாழ்க்கை நம்மை
இறுதி கட்டத்தை நோக்கி
அழைத்துச் செல்லும்

ஏதோ சொல்ல முற்படுகிறது.
அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.
உனக்கும் எனக்கும் அது வேறுபடலாம்.

எதுவாக இருந்தாலும்
இளமையில் வறுமை,
முதுமையில் தனிமை,
இல்லாமல் இருத்தல்
அதுதான் வாழ்வில் அருமை

கவிஞர் மு. கவிமணிகண்டன், ஆத்தூர்

# தண்ணீர்

விதைக்க
முடியா
கைகளின்
சுதந்திரம்
கோடரி
தூக்கியதால்

கவசம்
தரிக்கா
காடுகளின்
அழுகுரல்
விதைக்குள்
மரித்தது



கண்ணீர்
தேக்கிய
கடலும்
ஆவியாக
மறுக்க

நன்னீர்
பொழியா
மேகத்தில்

தண்ணீர்
வேண்டும்
பூமிக்குடங்கள்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

ஒரு வணக்கத்தோடு வாழ்வியலை
உற்றுநோக்கி
புதைத்துப் பார்ப்பதில்
எத்தனை லாவகம் இந்த நாளிகைக்கு.

கரங்கள் இணையும் பொருட்டுதான்
காதலும் மோதலும்
சலாமிட்டு இதயம் இணைய
மார்பகங்கள் கட்டுப்பிடி
வைத்தியமிணைகின்றன.



வரலாறுகளில் கையெடுத்து
கும்பிடுதல் என்பது
மன்னிப்பின்
இரண்டாம் குழந்தையாகத்தான்
பாவிக்கப்பட்டது.

கூந்தல் நெடுக
பின்னே முடியப்பட்டு
முற்றுபெறாமலே
இறுக அமைக்கப்பட்டுவிட்டன
பல இயந்திரப் பெண்களாய் மாறிய
இந்திரனின் சபைப் பெண்கள்.

ஒரு விளக்கின் வெளிச்சத்தில்
பயணிக்கும் விட்டில்களின்
வசிப்பிடத்தில்
அடர் இருள் விழத்தான் செய்கிறது.

பற்றியும் பற்றாமல்
முழுமைபெற்ற இருளில்
ஒரேயொரு விட்டிலின்
சிறு குருதி மாறி கும்மிருட்டை
கிழித்த வெளிச்சம்.


கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# சுட்டெரிக்கும் சூரியன்

வானத்தில் எரியும் நெருப்பு பந்து,
அதன் கதிர்கள் பூமியை
கடுமையான அரவணைப்புடன் எரிக்கின்றன.
வெப்ப அலைகள்
தாள மயக்கத்தில் நடனமாடுகின்றன.
இயற்கை அதன் உக்கிரமான
நிலைப்பாட்டிற்கு அடிபணியும்போது,
வறண்ட பூமி
சூரிய ஒளியின் முத்தத்தை குடிக்கிறது.
ஒரு உமிழும், உணர்ச்சிவசப்பட்ட,
நித்திய பேரின்பத்தில்.
இன்னும் அதன் பிரகாசத்தில்,
ஒரு மர்மம் உள்ளது,
வாழ்வின் ஆதாரம், வரலாற்றின் சின்னம்,
சுட்டெரிக்கும் சூரியனின்
இடைவிடாத ஒளியின் அடியில்,
இருண்ட இரவில் அதன் தீப்பிழம்புகள்
நம்மை வழிநடத்தட்டும்.
ஏனென்றால், அதன் ஆழமான தொடுதலில்,
நம் சக்தியைக் காண்கிறோம்.
சூடுதான்; ஆனாலும்,
சூரியனில்லா உலகம்.
சூன்யமே!



கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# வேடிக்கை மனிதரைப் போல



அழகான உலகம்
அழிந்து போகுதே
பழகும் மனிதமும்
பரிதவிக்கச் செய்யுதே

உள்ளொன்று வைத்து
உறவாய் நடிக்குதே
முள்ளெடுத்து நெஞ்சில்
மூர்க்கமாய்க் குத்துதே

அடுத்தவரைக் கெடுத்து
அதிலே குளிர்காயுதே
படுத்தும் கொடுமைகளில்
பாசத்தை அறுக்குதே

மெய்கொண்ட உடலினை
பொம்மையாய் ஆக்குதே
பொய்யினை வளர்க்க
பொல்லாப்புத் தேடுதே

பணத்தை நோக்கி
பாதாளம் செல்லுதே
பிணமாய் வாழ்ந்திட
பிசாசாய் மாறுதே

அச்சமின்றி அனைவருக்கும்
அநியாயம் பண்ணுதே
இச்சை கொண்டதால்
இம்சைகள் படுத்துதே

வன்மத்தை கையிலெடுத்து
வாளேந்தி நிற்குதே
துன்பத்தில் மற்றவரைத் தள்ளி
துடித்திடப் பார்க்குதே

என்ன உலகமடா
எங்கே மனிதமடா
சிலவேடிக்கை மனிதரைப் போல
வாழாதே

கவிஞர் கிருஷ் அபி, இலங்கை

# அம்மா

அரிதாரம் பூசவில்லை
ஆயினும் அழகு தான் அவள்
ஒப்பனைகள் இல்லாவிடினும்
ஒப்பற்ற புன்னகை இவளிடம்
காயங்கள் பல இருப்பினும்
கருணாயால் மனம் வென்றிடுவாள்

பேதையாய் தான் இருப்பினும்
மேதையாய் மாற்ற முனைந்திடுவாள்
தனக்குத் தெரிந்திடினும்
தெரியாது என்று மகவிடம் கற்றிடுவாள்
உயரப் பறக்க ஆவல் கொண்டால்
ஏணியாய் மாறி உதவிடுவாள்



சுடராய் நாம் மிளிர
மெழுகாய் கரைந்து உருகிடுவாள்
அன்பு எனும் ஆயுதத்தால்
அகிலமும் வெல்லும் தைரியம் தந்திடுவாள்
உடல் நலிந்திடினும் உழைத்து உழைத்து
உடலை உரமேற்றி உழைப்பவள்

அம்மா என்னும் மந்திரத்தை
அனுதினமும் போற்றிப் பாடிடுங்கள்
அகிலத்தில் அன்பால் மிளிருங்கள்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# விடுதலை

அடிமைப் படுத்திய அந்நியர்களுடன் போராடி
அடைந்த விடுதலை நாட்டின் விடுதலை!
கூட்டில் வாழும் பறவைகளை கூண்டில்
அடைத்து வளர்ப்பதல்ல விடுதலை! அவைகளை
விடுவித்தால் சுதந்திரமாகப் பறப்பதன்றோ விடுதலை!
தண்டனைக் காலம் முடியுமுன்னே கைதிகள்
நன்னடத்தை காரணமாய் பெற்றிடும் விடுதலை
உடல்சார்ந்த விடுதலை! விருப்பத்திற் கேற்றபடி
நடந்திடும் உரிமையை அளித்திடும் விடுதலை!
உண்மையான விடுதலை சிந்தனையின் சுதந்திரமே!
அறிவை மந்தமாக்கி சிந்தனையை முடக்குவது
அச்சமென்ற உணர்வு! அனைவரும் கற்றாலே
அச்ச உணர்விலிருந்து பெற்றிடலாம் விடுதலை!
எல்லோரும் எல்லாமும் பெற்றிடும் நிலையடைதல்
இல்லாமை என்ற கொடுமையிலிருந்து விடுதலை!
தான் விடுதலை அற்றிருக்கும் நிலையினை
தன்னைத் தானறிய முற்பட்டால் அறிந்திடலாம்!
வன்முறைகள், வன்கொடுமை, தீண்டாமை இவையெல்லாம்
இன்னமும் தொடர்வது அடக்கியாளும் எண்ணம்
சிந்தையை ஆள்வதால்! இதுவா விடுதலை?
அடுத்தவரை அடக்கியாள நினைத்திடும் நிலைமாறி
அடுத்தவரின் உரிமையைப் பறித்திடும் எண்ணமின்றி
அடுத்தவரும் உயர்வடைய வழிவகுப்பதே விடுதலை!
தடைகளை, அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து
அடியெடுத்து சிகரத்தை அடைவதன்றோ விடுதலை!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# ஆகாயத்தில்...

## சிறு நவீனம் அத்தியாயம்-2



அந்த ஆஸ்பத்திரியின் அவசர வார்டு பிரிவின் வெளியே நின்று அழுது கொண்டிருந்தது அந்த டாக்டரின் குடும்பம்.

"டாக்டருக்கு இப்படி ஒரு நோய் வருமென்று யார் எதிர்பார்த்தார்கள்" என்று டாக்டர் சந்திரசேகரைப் பார்க்க வந்திருந்த நண்பர் ராஜகோபால் அருகில் நின்றவரிடம் பேசிக்கொண்டிருந்தார்.

கொஞ்சம் நேரத்தில் அந்த இடம் பதட்டமாகிவிட, டாக்டர்.சந்திர சேகரின் மருமகன் நீதிபதி குமணராசன் வந்து சேர "இவ்வளவு நாள் நீங்கள் இந்த மருத்துவமனையிலேயே வைத்திருந்ததே தப்பு. இப்போது அழுது என்ன பிரயோஜனம்?

ஒரு வாரத்திற்கு முன்னாலேயே நான் அமெரிக்காவிற்கு கொண்டு போய் அவருக்கு நல்ல டிரீட்மெண்ட் கொடுக்கலாமென்றேன். நீங்கள் தான் மறுத்துவிட்டீர்கள்" வாசலில் நின்ற மாமியார் செல்வ லட்சுமியிடம் கோபப்பட்டார் குமணராசன்.

"இங்கே என்றால் எல்லோரும் அருகிலேயே இருந்து பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் ...." கரகரத்த குரலில் அழுதுகொண்டே சொன்னாள் மாமியார் செல்வ லட்சுமி.

"எல்லோரும் பக்கத்திலேயிருந்து பார்த்துக் கொண்டதின் லட்சணம் அவருடைய உயிரைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை..கொஞ்சமாவது காய்ச்சல் குறைந்திருக்கிறதா.."

"குறையவில்லை" தலையை அங்குமிங்கும் அசைத்தாள். மாமியார்.

" நல்ல வேளை இந்த விமானத்திலாவது அனுப்புவதற்கு வசதி கிடைத்தது. நீங்கள் மட்டும் கூடப் போகிறீர்கள். குவைத்திலிருந்து வேறு விமானத்தில் உங்களை அமெரிக்காவிற்கு அனுப்பி வைப்பார்கள். அங்கே உங்களை வரவேற்பதற்கும், ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதற்கும் என் நண்பர்கள் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்று சொல்லி விட்டு வேகமாக மருத்துவமனையின் நிர்வாகியான பெரிய டாக்டரை பார்க்க கிளம்பினார் குமணராசன்.

...தொடரும்

கவிஞர் இரஜகைநிலவன்

# குன்றக்குடி அடிகளார்

## கட்டுரை

### தனிவாழ்க்கை

1942 இறுதியில் தருமபுரம் ஆதீனத்திடமிருந்து யாத்திரைக்காஷாயம் என்னும் முதல்நிலைத் துறவை பெற்றுக்கொண்டார். துறவின் நெறிப்படி குன்றக்குடி அடிகளார் தெற்கே செல்லும்படி தன் ஆசிரியரிடமிருந்து ஆணைபெற்று மதுரை, திருநெல்வேலி, கன்யாகுமரி வரை 47 நாட்கள் நடந்து பிச்சை எடுத்தபடிச் சென்று திரும்பியபின் குருவிடம் மந்திரகாஷாயம் என்னும் அடுத்தநிலை துறவைப் பெற்றுக்கொண்டார். 1945-ல் தருமபுரி அம் ஆதீனத்தின் கட்டளைத் தம்புரான் என்னும் பதவியை அடைந்தார்.



தருமபுரம் ஆதீனம் ஆசியுடன் செப்டெம்பர் 5, 1949-ல் குன்றக்குடி மடத்தின் ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு ஆறுமுகதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தன் இளவலாக குன்றக்குடி அடிகளாரை நியமித்தார். அவருக்கு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்று பெயர் சூட்டடப்பபட்டது.

### இதழியல்

குன்றக்குடி அடிகளார் 1954-ல் மணிமொழி என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை நடத்தினார் .

1959 முதல் தமிழகம் என்னும் மாத இதழை தொடங்கினார். இடையில் ஓர் இடைவெளியுடன் அவ்விதழ் 1976 வரை வெளிவந்தது.

1980 முதல் நமது சிந்தனை என்ற இதழை தொடங்கினார். சிந்தனை என அது பெயர் மாற்றம் பெற்றது. மக்கள் சிந்தனை என்ற பெயரில் வெளிவருகிறது

தெய்வீகப்பேரவை சார்பில் அருளோசை என்னும் இதழை நடத்தினார்


சுதேசி விஞ்ஞான இயக்கம் சார்பில் அறிக அறிவியல் என்னும் இதழை நடத்தினார்

### இலக்கியப்பணிகள்

1946-ல் சி.என்.அண்ணாத்துரை திராவிட நாடு இதழில் மா. இராசமாணிக்கனார் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சி என்னும் நூலுக்கு மறுப்பாக அன்பரது ஆராய்ச்சியும் அறைகூவல்களும் என்னும் கட்டுரை எழுதியிருந்ததை மறுத்து ஜகந்நாதாச்சாரியார் என்பவர் எழுதிய தார்மீக இந்து என்னும் இதழில் அறிஞரின் ஆராய்ச்சியும் விளக்கமும் என்னும் தலைப்பில் தொடர் ஒன்றை எழுதினார். அதில் பெரியபுராணம் சாதியை வலியுறுத்தும் நூல் என்னும் சி.என்.அண்ணாத்துரையின் கருத்தை மறுத்திருந்தார். தொடர்ச்சியாக பெரியபுராணம், சைவசித்தாந்தம் சார்ந்து ஏராளமான கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

### தொகுப்பு

குன்றக்குடி அடிகளார் 52 நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் திருக்குறள் தொடர்பான ஆங்கிலநூல், திருக்குறள் உரை, அருள்நெறி முழக்கம் ஆகியவை தவிர்த்து பிற நூல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை என்ற பெயரில் 16 தொகுதிகளாக 6000 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன.




### தன்வரலாறு

குன்றக்குடி அடிகளார் 1992-ல் தன் வாழ்க்கை வரலாற்றை 'மண்ணும் மனிதர்களும்' என்னும் தலைப்பில் ஆனந்தவிகடனில் எழுதினார். அதற்கு முன் 'நடந்ததும் நடக்கவேண்டியதும்' என்னும் நூலை எழுதியிருக்கிறார்.

### அடிகளார் பெரியாருடன்

ஆகஸ்ட் 2, 1952-ல் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் பிள்ளையார் சிலையை உடைக்கும் போராட்டத்தை அறிவித்தபோது அதற்கு எதிர்வினையாக குன்றக்குடி அடிகளார் 11 ஆகஸ்ட் 1952-ல் சமயத்தலைவர்களையும் அறிஞர்களையும் குன்றக்குடியில் கூட்டி அருள்நெறித் திருக்கூட்டம் என்னும் அமைப்பை தொடங்கினார்.

## அடிகளார் பெரியாருடன்



1956-ல் குன்றக்குடி அடிகளாரும் ஈ.வெ.ராமசாமிப் பெரியாரும் குன்றக்குடி ஆதீனத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் நிகழ்த்திய உரையாடலில் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் மதத்தின் சாதியடிப்படையிலான ஒடுக்குமுறையைச் சுட்டிக்காட்ட, குன்றக்குடி அடிகளார் அதை ஏற்றுக்கொண்டார். குன்றக்குடி அடிகளார் மூடநம்பிக்கை, மனிதாபிமானமற்ற ஆசாரங்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் சாதிவேற்றுமைக்கு எதிராகவும் போராடுவதாக ஈ.வெ.ராமசாமி பெரியாரிடம் ஒப்புக்கொண்டார்.

## சமூகப்பணிகள்

குன்றக்குடி அடிகளார் மானுடநேய சீர்திருத்தங்களை சமூகவாழ்க்கையில் உருவாக்க விரும்பினார். சாதிவேறுபாடுகளையும், தனிப்பந்தி முறையையும் அவர் ஏற்கவில்லை. மனிதர்கள் சுமக்கும் பல்லக்கில் ஏறியதில்லை.

1973-ல் குன்றக்குடி கிராமத்தை தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டத்தை தொடங்கினார். குன்றக்குடி ஆதீனத்தின் கீழிருந்த கிராமங்களில் தீப்பற்றாத வீடுகளை அமைத்தல், குடிசைத்தொழில்களை உருவாக்கி வேலைவாய்ப்பில் தன்னிறைவுபெறச் செய்தல், குடிநீர் வசதி உருவாக்குதல், கிராமநிர்வாக முறையை செம்மையாக்குதல் ஆகியவற்றில் குன்றக்குடி அடிகளார் முன்மாதிரியான பணிகளைச் செய்திருக்கிறார். அதற்காக கூட்டுறவு சங்கங்களை உருவாக்கினார். 1958-ல் குன்றக்குடியில் உயர்நிலைப் பள்ளியை தொடங்கினார்.

## விருதுகள்

1986 தமிழக அரசின் முதல் திருவள்ளுவர் விருது
1989 அண்ணாமலை பல்கலை கழகம். கௌரவ டாக்டர் பட்டம்
1991 இந்திய அரசிய்ன் அறிவியல் மற்றும் செய்தித்தொடர்புத்துறை

## நூல்கள்:

- அறவழிகாட்டி
- அறிவுரைகள்
- அமுதமொழிகள்
- சொல்லமுதம்
- அப்பர் விருந்து
- குறள் செல்வம்
- புனிதநெறி
- சிந்தனை மலர்கள்
- சிந்தனைச் செல்வம்
- அருள்நெறி முழக்கம்
- பாரதி யுகசந்தி
- திருவள்ளுவர் காட்டும் அரசு
- கவியரங்கில் அடிகளார்
- பெரியபுராணச் சொற்பொழிவுகள்
- வாழ்க்கை விளக்கு
- வானொலியில் அடிகளார்
- நமது நிலையில் சமயம் சமுதாயம்
- மொழிவழிச் சிந்தனைகள்
- திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி விளக்கம்
- குறள் நூறு பொருளுரை
- ஆலயங்கள் சமுதாய மையங்கள்
- சைவசித்தாந்தமும் சமயமேம்பாடும்
- கடவுளைப் போற்று மனிதனை நினை
- சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்
- எங்கே போகிறோம்?
- சமய மறுமலர்ச்சி
- முத்துமொழிகள்
- தமிழமுது
- மண்ணும் விண்ணும்
- பொங்கல் பரிசு
- வாழ்க்கை நலம்
- திருவள்ளுவர்
- சமய இலக்கியங்கள்
- சிலம்பு நெறி
- மனம் ஒரு மாளிகை
- ஈழத்துச் சொற்பொழிவுகள்
- அடிகளார் உவமைநயம்
- குறட்செல்வம்
- நாயன்மார் அடிச்சுவட்டில்
- திருவருட் சிந்தனை
- திருக்குறள் பேசுகிறது
- தமிழும் சமயமும் சமுதாயமும்
- திருவள்ளுவர் காட்டும் அரசியல்
- வாக்காளர்களுக்கு வள்ளுவர்
- பாரதிதாசனின் உலகம்
- சமுதாய மறுமலர்ச்சி
- சிந்தனைச்சொலை
- கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்

அ வில்சன் இதழாசிரியர்

**நூல்கள்:**

- திருவாசகத்தேன்
- அப்பர் சுந்தரர் மாணிக்க வாசகர்
- மண்ணும் மனிதர்களும்
- திருக்குறள் உரை

**மறைவு**

ஏப்ரல் 14, 1995-ல் குன்றக்குடி அடிகளார் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் மறைந்தார்.

**நன்றி**

https://tamil.wiki/



## நாளை நமதே

எதையும்
சாதிக்க விரும்பும் மனிதனுக்கு
நிதானம் தான்
அற்புதமான ஆயுதமே தவிர
கோபம் இல்லை

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே   முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com